மாணவிகளுக்குச் சலுகை

*519 **வினா —திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண்கள் 18 வயது பூர்த்தியானால் S.S.L.C. தனியாக எழுதும் சலுகை தரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அச் சலுகையை ஆண்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : பெண்களுக்கு மட்டும் இந்த உரிமை ஏன் வழங்கப்படுகிறது ? அப்படி ஆண்களுக்கு வழங்குவதில் என்ன தடை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது பள்ளி இறுதிப் படிப்பு படிப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த விதிவிலக்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பெண்களுக்கு விவாக ரத்து செய்து கொண்டவர்கள், விதவைகள் இவர்களுக்கெல்லாம் ஒரு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பதற்காக 1962-ம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. இந்த விதிவிலக்கு இனிமேல் மற்றவர்களுக்கு விரிவாக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. கே. விநாயகம் : 1962-ம் ஆண்டிலிருந்து இந்த விதிவிலக்கு காரணமாக எவ்வளவு மாணவிகள் இந்தப் பரீட்சைக்குப் போயிருக்கிறார்கள் ? எவ்வளவு பேர்கள் அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த விவரங்கள் சேகரிப்பதற்கு ஏராளமாகச் செலவு ஏற்படும்.

திரு. பெ. சீனிவாசன் : ஆண்களைப் பொறுத்தவரையில் இந்தச் வயது வரம்பை கொஞ்சம் கூட்டி யார் வேண்டுமானாலும் 20 அல்லது 22 வயதுக்கு மேற்பட்டவர்களும் எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதலாம் என்று விதிவிலக்கு அளிப்பதால் என்ன இழப்பு ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மெட்ரிகுலேஷன் எழுத இப்போதே வாய்ப்பிருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பில் இப்போது ஏராளமானவர்கள் படிப்பதற்கு நம் நாட்டில் வாய்ப்புக்கள் இருக்கிற காரணத்தினால் இந்தச் சலுகைகள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

திரு. நா. வீராசாமி : அதிகமான பள்ளிகள் இருப்பதால் ஆண்களுக்கு அத்தகைய வாய்ப்பு கொடுக்கத் தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு பலயிடங்களில் வேலை செய்யும் லட்சக்கணக்கானவர்களுக்கு மேலும் மேல் படிப்பு படிக்க, அதாவது பி.யு.ஸி., பீ.ஏ. போன்ற பரீட்சைகள் தனியாக எழுதுவதற்கு மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று இந்த மாநிலத்திலும் அதற்கு வழி வகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே நாம் மாலை நேரக் கல்லூரிகள் வைத்திருக்கிறோம். அங்கே சென்று அவர்கள் படிக்கலாம். மற்ற மாநிலங்களில் என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால் அதைப் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether there is any proposal before Government to re-introduce E.S.L.C. examination in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.